
# வானவில்

VAANAVIL
ISSUE – 12 DECEMBER 2011

இதழ் - 12 மார்கழி 2011


# மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பெற கூட்டு முயற்சியும் விட்டுக் கொடுப்பும் தேவை




அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் போது, இடையிடையே தடங்கல்களும் முறிவுகளும் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அதுதவிர, கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைக்குப் புறம்பாக, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை இந்தப் பிரச்சினையில் ஒரு கருத்தொருமைப்பாட்டுக்குக் கொண்டுவரும் முகமாக அரசாங்கம் அமைக்க உத்தேசித்துள்ள 'பாராளுமன்ற தெரிவுக்குழு'விலும் தமிழ் கூட்டமைப்பு பங்குபற்ற மறுப்புத் தெரிவித்துள்ளது. இவை நல்ல சகுனங்கள் அல்ல.

தமிழ் கூட்டமைப்பு அரசுடன் முரண்படுவதற்கு பிரதான காரணங்களாக இருப்பவை, அது முன்வைத்துள்ள முக்கிய மூன்று விடயங்களாகும். அதாவது வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட வேண்டும். மாகாணசபைகளுக்கு காணி அதிகாரம் வேண்டும். மாகாணசபைகளுக்கென தனியான பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்பவையாகும். இவைபற்றி கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல, இந்த மூன்று கோரிக்கைகளையும் ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் வேறு விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு கூட்டமைப்பு முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் கூட்டமைப்பினரின் மூன்று கோரிக்கைகளில் உள்ள நியாயம் அல்லது சாத்தியம் பற்றிப் பார்ப்பதற்கு முன்னால், அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் வேண்டுகோளை எடுத்து நோக்கினால், அவர் இந்தக் கோரிக்கைளையே நிராகரிக்கும் நிலையில், அரசாங்கமும் ஜனாதிபதியும் கூறிவரும் '13வது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று தீர்வு காண்போம்' என்று கூறி வருவதின் அர்த்தம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

ஏனெனில் கூட்டமைப்பினரின் கடந்தகால மோசடி அரசியல் வரலாறு ஒருபக்கம் இருப்பினும், அவர்கள் இப்பொழுது கோருவது ஒன்றும் புதியவை அல்ல. அவை ஏற்கெனவே நடைமுறையில் இருந்தவையும் (வடக்கு கிழக்கு இணைப்பு), 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு குறித்தொதுக்கப்பட்டவையுமாகும். எனவே கூட்டமைப்பினரின் கோரிக்கைகளை ஒரேயடியாக நடைமுறைப்படுத்துவது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமா என்பது ஒருபுறமிருக்க, கொள்கையளவிலாவது அந்தக் கோரிக்கைகளை அரசு ஏற்க வேண்டும் அல்லது நிராகரிக்காமல் தன்னும் இருக்க வேண்டும்.

மறுபக்கத்தில், தமிழர் தரப்பில் கடந்த சில வருடங்களாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட புலிகளும் சரி, இப்போதைய தமிழ் கூட்டமைப்பும் சரி பேச்சுவார்த்தையை

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# ‘வானவில்’ ஒரு வயதைப் பூர்த்தி செய்கின்றது!

## அன்பான வானவில் வாசகர்களுக்கு,

‘வானவில்’ 12வது இதழ் (மார்கழி - 2011) தங்களின் முன்னால் இருக்கின்றது. இந்த இதழுடன் வானவில் தனது ஒரு வயதைப் பூர்த்தி செய்து இரண்டாவது ஆண்டில் கால் பதிக்கிறது. வானவில் இன்னமும் தவழும் குழந்தைதான்.

புலம்பெயர் நாடுகளில் மட்டுமின்றி, எமது தாயகமான இலங்கையிலும் கூட தமிழில் முற்போக்கான ஏடுகள் இல்லாத ஒரு குறை இருந்து வருகிறது. முன்னைய காலங்களில் இலங்கையில் இடதுசாரிக் கட்சிகளால் தமிழில் பல வார மாத இதழ்கள் ஒழுங்கான முறையில் நடாத்தப்பட்டு வந்தன. மேலதிகமாக தமிழகத்திலிருந்தும் சோவியத்யூனியன், சீனா போன்ற சோசலிச நாடுகளிலிருந்தும் தமிழில் ஏராளமான சஞ்சிகைகளும் நூல்களும் வெளிவந்தன. இவையெல்லாம் தமிழ் வாசகனுக்கு முற்போக்கான அரசியலையும் உலகக் கண்ணோட்டத்தையும் தங்குதடையின்றி வாரி வழங்கின.

பின்னர் ஏற்பட்ட உலக சோசலிச அமைப்பின் தகர்வும், முதலாளித்துவத்தின் உலகமயமாக்கலும் சேர்ந்து முற்போக்கு இலக்கியத்தை மோசமான முறையில் பின்னடைவுக்குள்ளாக்கிவிட்டன. அதேவேளையில் உலக ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் பல்வேறு வகையான செய்தி ஊடகங்களை வசப்படுத்தி வைத்துக்கொண்டு, ஒவ்வொரு விநாடியும் மக்களின் மனங்களில் நஞ்சை விதைத்து வருகின்றன.

எமது புலம்பெயர் தமிழ் சூழலை எடுத்துக்கொண்டால், தமிழில் செயற்படுகின்ற அச்சு ஊடகங்களும் சரி, இலத்திரனியல் ஊடகங்களும் சரி, ஏகாதிபத்திய வலைப்பின்னலின் ஒரு அங்கமாகவே செயற்படுகின்றன. அவர்களுக்கு மக்களின் நலன்களைவிட தமிழ் இனவாத முதலாளித்துவ சக்திகளினதும், ஏகாதிபத்திய எஜமானர்களினதும் நலன்களே முக்கியமாக இருக்கின்றன. சுதந்திர இலங்கையையும் சுதந்திரத் தமிழர்களையும் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு விலைபேசி விற்பதற்கு அவை அல்லும் பகலும் பாடுபடுகின்றன.

இந்த நிலையில்தான் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் ஒரு சிறிய குரலாக வானவில் தோன்றியது. இன்று அது தாயகத் தமிழர்களினது குரலாகவும் ஒலிக்கின்றது. எமது முயற்சியை ஆரம்பத்தில் அவநம்பிக்கையுடன் பலர் பார்த்ததை நாம் அறிவோம். ‘இது எத்தனை நாளைக்கு?’ என எள்ளிய எதிரிகளும், ஏங்கிய நண்பர்களும் இருந்தனர். எல்லாத் தடைகளையும் தாண்டி ஓராண்டை வானவில் பூர்த்தி செய்துள்ளது.

வானவில் கனடாவில் அச்சு வடிவில் சில நூறு பிரதிகள் வெளிவருகின்றது. மின்னஞ்சல் மூலமாக சில ஆயிரம் பிரதிகள் உலகின் மூலைமுடுக்கெங்கும் சென்றடைகிறது. அதன்மூலம் தொடர்புகள் அறுந்து மூலைக்கொருவராக சிதறியிருந்த பழைய இடதுசாரிச் செயற்பாட்டாளர்களை அது இணைத்துள்ளதுடன், தமிழ் தேசியப் போராட்டத்தில் இணைந்து பின்னர் திசைதெரியாது தடுமாறிய ஆயிரக்கணக்கானவர்களுக்கும் வெளிச்சத்தை வழங்குகின்றது. அந்த அளவில் இது வானவில் என்ற சிற்றேட்டின் பெருவெற்றியாகும்.

இந்த ஓராண்டுப் பூர்த்தி நேரத்தில் வானவில் ஆசிரிய குழு தனது அனைத்து வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், அது வெளிவருவதற்கு சலிப்பில்லாது நிதியுதவி அளிப்பவர்களுக்கும், அதை விநியோகிக்கும் பல்வேறு நட்புச்சக்திகளுக்கும், தனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.
*

---

ஜுன் 1, 1848 அன்று **புதிய ரைன்** பத்திரிகையை மார்க்சும் எங்கெல்சும் தொடங்கினர். இந்தப் பத்திரிகையின் முதல் இதழ், ஜனநாயகக் பத்திரிகை என்னும் அடையாளத்துடன் வெளிவந்தது. பாட்டாளி வர்க்கத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கும் அவர்களை இயக்கத்தின் பால் ஈர்க்கவும் எடுக்கப்பட்ட முயற்சி இது. கம்யூனிச புரட்சிகரப் பத்திரிகை என்னும் அடையாளத்துடன் இதே பத்திரிகை வெளிவந்திருந்தால், அதைப் பாட்டாளி மக்கள் ஒதுக்கிவைத்திருக்கக்கூடும். பெயரளவில் ஜனநாயக முத்திரை பதிக்கப்பட்டிருந்தாலும் உள்ளடக்கம் முற்போக்கானதாகவும் புரட்சிகரமானதாகவும் அமைந்திருந்தது.

தகவல்: மருதன்

---

வானவில்

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# மெக்சிக்கோவின் மயன் நாகரீகம் கேரளாவில் இருந்து சென்றது!

## தமிழக ஆய்வாளர் கூறுகிறார்!!

தமிழகத்தின் கன்யாகுமரி வரலாற்று பண்பாட்டு ஆய்வு மைய பொதுச்செயலாளர் எஸ்.பத்மநாதன், 2008ம் ஆண்டில் கள ஆய்வு செய்வதற்காக மெக்சிக்கோ நாட்டிற்கு இருவார காலம் சென்று வந்தார். அவருக்கு நாகர்கோவிலில் அளிக்கப்பட்ட பொதுவரவேற்பில் அவர் நிகழ்த்திய உரையின் முக்கிய சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

"நமது புராணங்கள் குறிப்பிடும் பாதாளலோகம் மெக்சிக்கோதான். கேரளத்தில் கொண்டாடப்படும் திருவோணத்தின் கதாநாயகன் மகாபலி. மெக்சிக்கோ நாட்டிலும் மகாபலி உள்ளது. இந்தக்கதை அங்கே ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. மிகவும் தூரமான நாட்டிலிருந்து வந்த மன்னன் ஒருவன், அங்கே பனாமா கடற்கரையில் இறங்கினான் என்று அங்கே கதை ஒன்று வழக்கில் உள்ளது. அவன்தான் மகாபலி. அவனைத் தொடர்ந்து அங்கே சென்ற மயன் தனது கைவண்ணத்தைக் காட்டியதன் பயனாகவே, மெக்சிக்கோவில் கோயில்களும் பிரமிடுகளும் உருவாயின என்பது கள ஆய்வில் தெரிய வந்தது. அதுதான் இன்றும் மயன் (மாயன்) நாகரீகமாக அங்கே பறைசாற்றி நிற்கிறது. மெக்சிக்கோ நாடு ஸ்பெயின் நாட்டவரின் ஆதிக்கத்துக்கு வந்த பிறகு மயன் உருவாக்கிய கலைச்செல்வங்கள் அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

மெக்சிக்கோ நாட்டிலுள்ள மலைகளும் பள்ளத்தாக்குகளும் செடிகொடிகளும் மிருகங்களும் பறவைகளும் மக்களின் உடல் அமைப்புகளும் பயன்படுத்தும் பொருட்களும் எல்லாம் தற்போதைய கேரள நாட்டையே நினைவுறுத்துகின்றன. இதன் மூலம் மகாபலி மற்றும் மயன் ஆகியோர் முன்பு வாழ்ந்த நாடு கேரளம் என்றும், அங்கிருந்து அவர்கள் மெக்சிக்கோ சென்றதனால்தான் இரு நாடுகளுக்கும் இடையே ஒற்றுமை காணப்படுகிறது என்றும் அறிய முடிகிறது.

மெக்சிக்கோ நாட்டில் உள்ள நான்கு பக்கமும் படிகள் கொண்ட பிரமிடுகள் சூரியனுக்காக எழுப்பப்பட்டவை. இந்தப் பிரமிடுகள் பற்றிய இலக்கணம் மயன் எழுதிய பன்னிருசாரம் என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த பிரமிடுகள் கேரள மாநிலத்தில் கண்ணனூர் கோழிக்கோடு மாவட்டங்களிலும், தமிழ்நாட்டில் கன்யாகுமரி தூத்துக்குடி மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. இவற்றை காலசுவாமி என்று வணங்குகிறார்கள்.

மேலும் மெக்சிக்கோ நாட்டில் தமிழர்கள் பயன்படுத்தும் அம்மி - குளவியை பயன்படுத்துகிறார்கள். அவர்கள் மட்பாண்டங்களையும் பயன்படுத்துவது கள ஆய்வில் தெரியவந்தது. அங்குள்ளவர்கள் நாகத்தை தெய்வமாக வழிபட்டதை அருங்காட்சியகத்தில் நடத்திய கள ஆய்வுகள் தெளிவுபடுத்தின. ஆகவே மெக்சிக்கன் நாட்டு மாயன் நாகரீகம் தமிழ்நாட்டு மயன் நாகரீகமே என்று கள ஆய்வில் நிரூபணமாகியுள்ளது."

தகவல்: 'தினமணி' நாகர்கோவில் பதிப்பு (2008 ஜூன் 09)
*

## இந்தியாவின் கடனைவிட பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணம் அதிகம்!

இந்தியா வெளிநாடுகளுக்குக் கடனாகக் கொடுக்க வேண்டிய பணம் 19 இலட்சத்து 57 ஆயிரம் கோடி ரூபாய்! ஆனால் இந்தியர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணம் 21 இலட்சம் கோடி ரூபாய்களுக்கு மேல் என்று தெரிய வருகிறது!! சுவிஸ், ஜேர்மன் நாட்டு வங்கிகளில் உள்ள கறுப்புப் பண விபரத்தை தருவதற்கு அந்நாடுகள் தயாராகவிருந்தும், இந்திய அரசு அவற்றைப் பெற்றுப் பகிரங்கப்படுத்த மறுத்து வருகிறது. காரணம் அந்த விபரங்களை வெளியிட்டால், மக்கள் மத்தியில் இன்று செல்வாக்குடனும் கௌரவத்துடனும் உலா வரும் பல பிரபலங்களின் முகத்திரை கிழியும் என்ற பயம்தான். *

## தமிழகத்தில் பிச்சை எடுக்கப் பயன்படும் யாழ்ப்பாண தேங்காய் சிரட்டை!

பயிரியல் ஆராய்ச்சியாளர்கள் வங்கக்கடல் தீவுகளிலிருந்து கடல் வழியாகத் தென்னை தமிழ்நாட்டில் பரவி இருக்கலாம் எனக் கருதுகின்றனர். தென் தமிழ்நாட்டில் யாழ்ப்பாணம் தேங்காய் மிகச் சிறப்பாகப் பேசப்படுகின்றது. யாழ்ப்பாணம் தேங்காயின் மிகப் பெரிய ஓடுகளைப் பிச்சைக்காரர்கள் திருவோடாகப் பயன்படுத்துகின்றனர்.

- பேராசிரியர் தொ.பரமசிவன் எழுதிய 'அறியப்படாத தமிழகம்' என்ற நூலிலிருந்து
*

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள்?

**இதையும் படியுங்கள்!** - பி.மரியதாஸ்

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் அடிக்கடி தாக்கப்படுவதாக புகார் எழுவதும், அதையொட்டி அவர்கள் தொழில் பகிஸ்கரிப்பில் ஈடுபடுவதும், இது சம்பந்தமாக சில தமிழக அரசியல் கட்சிகள் தெருவில் இறங்கிப் போராடுவதும், தமிழக முதலமைச்சர்கள் இது குறித்து மத்திய அரசுக்கு 'காட்டமாக' கடிதம் எழுதுவதும் தொடர்கதையாகி வருகிறது.

தமிழக மீனவர்கள், தமது பல்லாயிரக்கணக்கான மீன்பிடிப் படகுகளில் தெரிந்து கொண்டே இலங்கைக் கடற்பரப்புக்குள் தினசரி ஊடுருவுவதே இதற்கான மூல காரணம். இந்த ஆயிரக்கணக்கான தடவைகளில், ஓரிரு தடவைகள் மட்டுமே இலங்கைக் கடற்படை அவர்களை எச்சரிக்கை செய்யும்போது, சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறுவது தவிர்க்க முடியாதது என்பதை எவருமே விளங்கிக்கொள்ள முடியும்.

இந்த விடயத்தில் உண்மையில் தமிழக மீனவர்களின் தொடர்ச்சியான ஊடுருவலால் மிகவும் பாதிக்கப்படுவது, இலங்கையின் வடக்கு கிழக்கு மேற்குக் கடல்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இலங்கைத் தமிழ் மீனவர்கள்தான். இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதனால்தான் சில இந்திய மத்திய அமைச்சர்களும், கடற்படைத் தளபதிகளும் கூட கடந்த காலங்களில், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் போகக்கூடாது என பல தடவைகள் எச்சரித்துமுள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில், இலங்கைத் தமிழர்களுக்காக தமது உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருப்பதாக சினிமா பாணியில் வீர வசனம் பேசும் சில தமிழக பிழைப்புவாதக் கட்சிகள் (கேவலம் இதில் இப்பொழுது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் து.ராஜாவும் சேர்ந்து கொண்டுள்ளார்!), அதே இலங்கைத் தமிழரின் ஒரு அங்கமான இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கு, தமிழக மீனவர்கள் இழைக்கும் அநியாயத்தை ஏன் தட்டிக் கேட்காமல் கண் மூடி மௌனியாக இருக்கிறார்கள்? 'தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும், வாயும் வயிறும் வேறு' என்றபடியாலா?

சரி, அதுதான் போகட்டும். இலங்கைத் தமிழர்களின் வாழ்விட எல்லைகளைப் பாதுகாத்து, அவர்கள் கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற்காக தனித்தமிழ்




நாடான 'தமிழீழம்' அமைக்கப் போர் புரிந்த விடுதலைப் புலிகள் கூட, எப்பவாவது தமிழக மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவலைக் கண்டித்திருக்கிறார்களா? அதுதான் போகட்டும். இப்பொழுது இலங்கைத் தமிழர்களுக்காக ஆகாயத்தை வில்லாக வளைத்து வித்தைகள் செய்யப் போகிறோம் என மார்தட்டும், புலிகளின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தன்னும், தமிழக மீனவர்கள் எமது வடக்கு கிழக்கு மீனவர்களுக்கு இழைக்கும் கொடுமையைக் கண்டித்து ஒரு தடவை தன்னும் குரலெழுப்பியதுண்டா?

ஆனால் பொய்யுரைப்பதில் தம்முடன் போட்டிபோட முடியாத உயரத்தில் கொடிகட்டிப் பறக்கும் புலி சார்பு ஊடகங்கள் மட்டும், இது சம்பந்தமாக வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமது கைவரிசையைக் காட்டத் தயங்குவதில்லை. அண்மையில் கூட, அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டுக்குச் சென்றிருந்த இலங்கை – இந்தியத் தலைவர்களின் சந்திப்புப் பற்றி இட்டுக்கட்டிய முற்றுமுழுதான பொய்ச் செய்திகளை வெளியிட்டு அவை டமாரமடித்துக் கொண்டன. அதாவது, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை இலங்கைக்கு வருகை தரும்படி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அழைத்ததாகவும், இலங்கையில் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதை நிறுத்தும் வரை, தான் அங்கு வரப்போவதில்லை என அவர் திட்டவட்டமாக மறுத்துவிட்டதாகவும், தமக்குத்தாமே எழுதிப் புளகாங்கிதம் அடைந்து

கொண்டன. ஆனால் மன்மோகனுக்கு அல்லவா தெரியும், தனது நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் அத்துமீறிச் செய்யும் குசும்புத்தனங்கள்!

இவ்வாறிருக்க, இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்ட போது, அதற்குப் பதில் மனு தாக்கல் செய்த தமிழகக் கடலோரக் காவற்படை அதிகாரி மூர்த்தி பின்வரும் விபரங்களை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

- தமிழக மீனவர்களின் ஒவ்வொரு மீன்பிடிப் படகிலும் கட்டாயமாக வி.எச்.எப் (VHF) என்ற கருவி பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கருவி மீனவர்கள் தாம் கடலின் எந்தப் பாகத்தில் (இந்தியப் பரப்புக்குள்ளேயா அல்லது இலங்கைப் பரப்புக்குள்ளேயா) நிற்கிறோம் என்பதைக் காட்டுவதுடன், தமக்கு ஏதாவது ஆபத்துகள் நேர்ந்தால், இந்தியக் கடலோரக் காவற்படையுடன் தொடர்பு கொள்ளும் வசதியையும் கொண்டுள்ளது. ஆனால் இலங்கைக் கடற்படை தம்மைத் தாக்குவதாகச் சொல்லும் தமிழக மீனவர்கள், அப்படியான சந்தர்ப்பங்களில் ஒருபோதும் கடலோரக் காவற்படையை இந்தக் கருவியின் மூலம் தொடர்பு கொண்டது கிடையாது என மூர்த்தி கூறியுள்ளார்! இது ஏன்? தமிழக மீனவர்கள் பிழை தம் பக்கம் எனக் கருதியதால்தானே?
- இலங்கையில் கடல் வளத்தைப் பாதுகாப்பதற்காக, அங்கு சில வகை வலைகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளார்கள். ஆனால் அங்கு ஊடுருவும் தமிழக மீனவர்கள், அந்தத் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தியே அங்கு மீன் பிடிக்கிறார்கள்.
- கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் கொடுத்துள்ள தகவலின்படி, இவ்வாண்டு (2011) ஜூன் முதல் அக்டோபர் மாதம் வரையான காலத்தில், 17,102 தமிழக மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவியுள்ளன!
- அக்டோபர் 28 முதல் நவம்பர் 04வரை மட்டும் 1482 படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவியுள்ளன!!

இவையெல்லாம் நாம் சொல்லும் தகவல்களல்ல. கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகம் சொன்னதாக, இந்தியக் கடலோரக் காவற்படை அதிகாரி மூர்த்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் வெளியிட்டுள்ள தகவல்கள்!!!

இந்த விடயங்களை வெளியிட்ட ‘துக்ளக்’ பத்திரிகை, இந்தியாவின் குஜராத் மாநில அரசு தனக்கு பாகிஸ்தானுடன் உள்ள எல்லைக் கடற்பரப்பில், 5 மைல் தூரத்துக்குள் தனது மாநில மீனவர்கள் மீன்பிடிக்கக்கூடாது என கறாரான தடை விதித்துள்ளது. அதுபோல தமிழக அரசும் (அதுவும் குஜராத் முதல்வர் மோடியின் நெருங்கிய சிநேகிதி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா) ஏன் தடை விதிக்கக்கூடாது எனக் கேள்வி எழுப்பியுள்ளது. அப்படிச் செய்தால், தமிழக மீனவர்களின் ‘ஓட்டு’ இல்லாமல் போய்விடுமே என, துக்ளக் அதற்குப் பதிலும் சொல்லியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் போஸ் அண்மையில் விடுத்த அறிக்கையொன்றில், தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விடயத்தில் தவறு முழுவதும் தமிழக மீனவர்களுடையதே எனத் தெரிவித்துள்ளார்.

இப்படியெல்லாம் நிலைமை இருக்கையில், தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விடயத்தில் உண்மையைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டு, தேசத்துரோகத்துடன் பொய்ச் செய்தி வெளியிடுவதை இனியாவது, புலிப் பினாமி ஊடகங்கள் கைவிட வேண்டும்.
*

## சுவைக்கவும் ரசிக்கவும்! செந்தமிழ் நாடென்னும் போதினிலே..

கேள்வி : ‘சுத்தமான தமிழைச் சுவைக்கவே தமிழகம் வந்தோம்’ என்று சென்னைக்கு வந்துள்ள சிங்கப்பூர் மாணவர்கள் கூறியுள்ளார்களே! திரும்பச் சிங்கப்பூர் செல்லும் போது அவர்களது மனநிலை எப்படி இருக்கும்?
பதில் : அவர்களுடைய மனநிலை எப்படி இருக்குமோ தெரியாது. ஆனால், சென்னையில் சில நாட்கள் தங்கினால், அவர்கள் பேச்சு இப்படித்தான் இருக்கும்.

‘இன்னாம்மா எப்படி கீது பாத்தியா இங்கு அல்லாம்!’

‘பேஜரா கீதுபா! இன்னாப்பா இது? டமிலை இப்படி கொளை பன்னிக்கினுகீறாங்கலே!’

‘மச்சி ஏமா கண்ணு! அந்தக் கடையாண்டே போயி வாலைப்பலம் சாப்பிட்டுகீனு டமிலைப்பத்தி கலாய்க்கலாம் வரியா?’

‘இன்னா அல்லாரும் இப்டிப் பேசிக்கீனுறிங்க? டமிளை டமிளாப் பேசுங்கப்பா!’

‘நீங்கல் ஒலுங்காக டமில் பேச வேண்டும் என்று நான் உங்கல அல்லாம் கேட்டுக் கொல்கிறேன்.’

– சென்னையில் வந்து தமிழைச் சுவாசித்தவர்களின் கதி இப்படித்தான் இருக்க முடியும். இது ‘துக்ளக்’ இதழில் வந்த ஒரு கேள்வி – பதில் ஆகும்.

# ஏழாம் அறிவு வேண்டாம்! பகுத்தறிவே தேவை!!

இரண்டு வாரங்களுக்கு முன்பு 7ஆம் அறிவு திரைப்படத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படத்தைப் பார்க்காத புலம்பெயர் தமிழர்கள் இல்லையென்றே கூறலாம். அந்தளவுக்குப் பரவலாகப் பேசப்பட்டபடமது. அவர்களுக்கு தலைக்குமேல் பிரச்சினை இருந்தாலும், வெளிவரும் புதுப்படங்களையும், சின்னத்திரைகளையும் விட்டுவைப்பதில்லை. கலைப்படமோ? வர்த்தகப்படமோ? எதுவாகவிருந்தாலும் ஒன்றுமே தள்ளுபடியில்லை. அவர்களிடம் கலையிலக்கிய முயற்சியோ, வாசிப்போ, தேடலோ? இல்லாதவிடத்து அவர்கள் இதைத்தவிர வேறெதைத்தான் செய்யமுடியும்?.

மோகன்

இந்தப்படம் பிரமாண்டமான காட்சியமைப்புக்களாலும், ஒளியமைப்பாலும், தொய்வு ஏற்படாத கதை நகர்த்தலாலும் சிறந்துதான் விளங்குகிறது. கதாநாயகன் சூரியாவின் கண்களில், பாத்திரத்திற்கு ஏற்றாற்போல ஞானஒளி வீசுவதையோ, அல்லது கருணையுள்ளம் தெரிவதையோ, கோபாவேசம் கொப்பளிப்பதையோ காணமுடியவில்லை. இருந்தாலும், பாத்திர உருவாக்கம் ஒன்று நிகழ்ந்துள்ளமை நல்ல அறிகுறியே. குறிப்பாக எமது தமிழ்த் திரைப்படங்களில், எம்.ஜி.ஆரின் காலம்தொட்டு ரஜனிவரை பாத்திரவார்ப்பு இடம்பெறுவது அரிது. ஒரு சிரத்தைபூர்வமான நடிப்பைவிடுத்து, கலையைக் கொச்சைப்படுத்தும் வெகுளித்தனமே நிரம்பிக்காணப்படும். இதனைப் பிரபுதேவாவிடமும் நிறைய அவதானிக்கலாம்.

7ஆம் அறிவு திரைப்படத்தைப் புரிந்துகொள்வதற்கு எமக்குப் பிரத்தியேகமான அறிவேதும் தேவையில்லை. அந்தப்படம், போதிதர்மாவின் மூலம்பற்றியும், சீனாவின் operation Red பற்றியும் சித்தரித்து இறுதியில் தமிழர்களை உசுப்பேத்தும் வசனங்களையும் அள்ளிவீசுகிறது. அவ்வளவுதான். போதிதர்மா ஒரு தமிழன்.! அவர் காஞ்சிபுரத்தைச்சேர்ந்தவர். பல்லவமன்னரின் (கி.பி 6 பிற்பகுதி ஷீ கி.பி 9 பிற்பகுதி வரை) மூன்றாவது இளவரசர். இவர் 1600 வருடங்களுக்குமுன், மூன்று வருடத் தரைவழிப் பயணத்தில் சீனாவை அடைந்தவர். அவரங்கு தற்காப்புக்கலையான குங்பூவையும், அட்டமாசித்திகளினால்( யோகத்தினால் பெறப்படும் எண்வகைச் சித்திகளாம்) பஞ்சபூதங்களைக் கட்டுப்படுத்தும், நோக்குவர்ம (Hypnotism) கலையையும், சரகசம்நதி என்ற மருத்துவக்கலையையும் பயிற்றுவித்தார் என்ற செய்திகளைத் தருகிறது. இதற்கு எதிர்மாறாக அவர் பாரசீகத்தைச் (இன்றைய ஈரான்) சேர்ந்தவர் என்று சீனக்கல்வெட்டுக்கள் சொல்வதாகவும் வரலாற்றுப்பதிவுண்டு. வரலாற்றுத்தகவல்கள், இவ்வாறு எதிரும் புதிருமாகவிருக்கும்போது இயக்குநர் முருகதாஸ் தமிழ்மொழி வெறியர்களைக் குஷிப்படுத்தும் நோக்கில், அவர் ஒரு தமிழர் என்று எழுந்தமானமாகச் சொல்லிச் செல்கிறார். தமிழர் என்பதற்கான எந்தவிதமான தொல்பொருள் ஆதாரங்களையும் துணைக்கிழுக்காமல், சர்வசாதாரணமாகச் சொல்லிச் செல்கிறார். இது, வேற்றுமொழியினர் தமிழ்மொழியின்மீது வைத்திருக்கும் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்தும் ஒரு வரலாற்று மோசடியாகும். உண்மையான வரலாற்றைப் பகிர்ந்துகொள்வதே ஒரு கலைஞனுக்கு அழகு. நாமும் தேடுவோமாகுக!



இரண்டாவது விடயமாகப் பேசப்படுவது, சீனாவின் operation red. சீனா, இந்தியாவின் மீது தொடுக்க எண்ணியுள்ள உயிரியல் யுத்தம் (Bio war). இந்தியாவிற்குள் வைரசைப்பரப்பி இந்தியர்களைச் சாகடிப்பது. இந்த நோயினால் இந்தியா தவிக்கும்போது சீனா, இந்தியாவைப் பணயம்வைத்து தனது காலடியில் பணியவைக்கும். காரணம், போதிதர்மனால் கண்டுபிடிக்கப்பட்ட அந்நோய்க்கான மருந்து சீனாவிலேயே உள்ளதாம். இயக்குநர் முருகதாஸ், போதிதர்மனின் மனோவசியக்கலையின் கடாட்சம் தானும் பெற்றவர்போல, சீனாவின் மூளைக்குள் நுழைந்து எந்தவித ஆதாரமுமில்லாமல் சர்வசாதாரணமாகச் சொல்கிறார். இதொரு அபாண்டமான குற்றச்சாட்டு. சீனாவின் முன்னேற்றத்தை முன்னுதாரணமாகக்காட்டாது, இவ்வாறானதொரு கொடிய செயலைப்புரியப் போகிறதென அதீத சீன எதிர்ப்புவாதத்தைப்

பிரச்சாரம் செய்கிறார். இது, சீனாவை இந்தியாவின் நேரடி எதிரியாகச் சித்தரித்து, இந்திய மக்களிடையே நச்சுவிதையை விதைக்கும் செயலாகும்.

அடுத்து அவர், தமிழ்மொழி வெறியாளர்கள் வட்டத்தை குஷிப்படுத்தும் நோக்கில், தமிழ்நாட்டில் ஆண்மகன் இறந்து பிறந்துவிட்டால் நெஞ்சிலை கீறித்தான் புதைப்பார்கள், போரில் புறமுதுகு காட்டக்கூடாது போன்ற, தலைவர்கள் பின்னால் நின்று உசுப்பேத்தும் வசனங்களையும் அள்ளிவீசுகிறார். கிட்டதட்ட புறநானூற்றில் வந்ததாகக் கூறப்பட்ட, நம்பக்கடினமான செய்யுள்களை நினைவுபடுத்துகிறார். தமிழ்த் தாயொருத்தி தனது மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டு இறக்க நேர்ந்தால், அவனுக்கு பாலூட்டிய தனது முலையையே அறுத்து எறிவாளாம். இத்தகைய வசனங்களை நாம் எத்தனை தடவைகள்தான் கேட்கப்போகிறோம்?. ஆதிக்கவெறி பிடித்த தமிழ் மன்னர்களைத் திருப்திப்படுத்தி, பாமரமக்களை அதிகமாகக்கொண்ட போர்வீரர்களை பலிக்கடாக்களாக்கிய வசனங்களை இவரும் அள்ளிவீசுகிறார். இத்தகைய வீரவசனங்கள், தலைவர்களின் நலன்களையே பாதுகாக்கும். உழைக்கும் மக்களை அல்லது கீழ்மட்டப் போராளிகளைப் பாதுகாக்கப்போவதில்லை. உழைக்கும் மக்களால் நிரப்பப்பட்ட போராளிகளைக் கரும்புலியாக்குவதற்கும், தீக்குளிப்பதற்குமே தூண்டும். தீக்குளித்த பின்னர், கரும்புலியாகிய பின்னர், தமிழ் உணர்வாளர்கள் என்று மார்தட்டுவோரால் கவிதைகள்பாடி, பரிசில்கள் பெறவே பயன்படும். தலைவர்கள் எவருமே போரிட்டோ, சயனைட்வில்லை சாப்பிட்டோ வீரச்சாவடைந்ததாகப் பதிவில்லை. மிகவும் கோழைத்தனமாக எதிரியிடம் பிடிபட்டு, சித்திரவதைப்பட்டு மரணித்ததாகவே செய்திகளுண்டு. அவர்களின் சீருடையுடனான கம்பீர நடையும், கையசைவுகளும், பேச்சும் வெறும்பாசாங்கு என்றே நிரூபித்தன. ஈற்றிலவை படப்பிடிப்புக்களுக்கான வேஷங்களாகவே நிறைவுபெற்றன.

இதேகதிதான் எமது போராட்டத்திற்கும் நிகழ்ந்துள்ளது. தமிழீழமென்பது சாத்தியமில்லை என இடதுசாரிகளால் ஆரம்பகாலங்களில் சொல்லப்பட்டாலும், எம்மால் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பின்னரே (1987) யதார்த்த பூர்வமாக உணரப்பட்டது. அப்போதெல்லாம் ஆயிரத்திற்குட்பட்ட (650 புலிப்போராளிகள், புலிகளால் கொல்லப்பட்ட மாற்று இயக்கப் போராளிகளென) போராளிகள் மட்டுமே மரணித்திருந்தனர். அத்தருணம் புலித்தலைமை இணங்கிப்போயிருந்தால் பல்லாயிரக்கணக்கான போராளிகளையும், மக்களையும் பலிகொடுத்திருப்பதை தவிர்த்திருக்கலாம்.

அடுத்து, தமிழ்ப்பெருமையையும், தமிழ் வீரத்தையும் பற்றிப் பேசுகிறார். அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள வில்லு வாளுடன் வீரத்தையும் திருப்பி எடுக்கச்சொல்கிறார். இது தமது பிரபல்யம், சுயவிளம்பரத்திற்காக தமிழை ஆயுதமாக எடுத்தவர்களின் நெஞ்சில் பால்வார்க்கலாம். ஆனால் தமிழ்மொழி பேசும் உழைக்கும் மக்களுக்கு எந்தவிதபயனையும் தரப்போவதில்லை. பதிலாக எதிர்விளைவையே கொடுக்கும். கிட்டத்தட்ட கி.பி 6ஆம் நூற்றாண்டிற்கு திரும்ப போகச்சொல்கிறார். இவர் எந்த யுகத்தில் இருக்கிறார்? இன்று அமெரிக்காவோ ஒலியையும்விட ஐந்துமடங்கு வேகமான யுத்தவிமானத்தைக் கண்டுபிடித்துள்ளது. சீனாவோ உலகிலேயே மிகவும் வேகம்கூடிய கணணியைக் கண்டுபிடித்துள்ளது. உலகம் இவ்வாறு முன்னேறிக் கொண்டிருக்கும்போது, தமிழ்மக்களை பின்நோக்கியிழுத்து மன்னராட்சி முறைமைக்கு கொண்டுசெல்கிறார். தமது தோல்விக்கான காரணத்தை சுயவிமர்சனம் செய்வதைத் தவிர்க்கும்பொருட்டும் போராட்டத்தோல்விக்கும், மக்கள் அழிவிற்கும், தமக்கிருக்கும் பொறுப்பைத் திசைதிருப்பும் நோக்குடனே ஒன்பதுநாடுகள் சேர்ந்து அடித்ததென்று, சர்வதேச புலித்தலைமை கதையளந்ததை, (ஏதோ ஒன்பது நாடுகளும் ஒன்பது முனைகளில்நின்று தாக்கியழித்தது போல) இவரும் தன்பங்கிற்கு கதையளக்கிறார். உண்மையில் அமெரிக்கா, கப்பலனுப்பி புலிகளை மீட்பதற்கு அனுமதிகோரியிருந்தமை யாவருமறிந்ததே. ஏனைய நாடுகள், புலிகள் மூன்றாந்தரப்பினரிடம் சரணடைய அனுமதிக்க வேண்டுமென்றும், புலிகளை முற்றுமுழுதாக அழிப்பதைக் கைவிடவேண்டுமென்றும் இலங்கையரசிடம் கோரிக்கை விடுத்தமையையும் எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இவற்றுக்கு இலங்கையரசு இணங்க மறுத்தமையே மேற்குலகின் இன்றைய அழுத்தத்திற்கான காரணமும் கூட.

மொத்தத்தில் இத்திரைப்படத்தின்மூலம், அதீத சீன எதிர்ப்புவாதத்தைக் கிளப்பி, மேற்குலகையும் இந்தியஅரசையும் திருப்திப்படுத்தி, தமிழர் பெருமையையும் வீரத்தையும்பேசி, புலம்பெயர்தமிழர்களையும், தமிழ்நாட்டின் தீவிரதமிழ்த் தேசியவாதிகளையும் திருப்திப்படுத்தி, புத்திசாலித்தனமாகப் பணம் பண்ணியுள்ளார். அவ்வளவுதான். *

---

'எங்கெல்ஸ் ஒரு அறிவுக்களஞ்சியம். இரவு, பகல் பாராமல் அவரால் எப்போதும் சிந்திக்கமுடியும், செயல்படமுடியும். சிந்திப்பதிலும் எழுதுவதிலும் அவர் ஒரு பிசாசு.'

- எங்கெல்ஸின் எழுத்துத் திறனையும் புதிய ரைன் பத்திரிகையாசிரியர்களில் ஒருவராக அவர் ஆற்றிய கடமைகளையும் எண்ணி பெருமிதம் கொண்ட மார்க்ஸ் இவ்வாறு பாராட்டினார்.

# இலங்கைத் தமிழர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய எரிக் சோல்கெய்ம்மின் ஆலோசனைகள்!

சென்ற இதழ் தொடர்ச்சி

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதி ஆனதும் புலிகளை நோக்கி சமாதான முயற்சிகளுக்கான அழைப்பு மீண்டும் விடுக்கப்பட்டது. ஆனால் 'கெடு குடி சொல் கேளாது' என்பது போல, புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடி, மகிந்த அரசுடன் வலிந்து போருக்குச் சென்றனர். இந்தக் கட்டத்திலும், நோர்வே புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை என்ற அபிப்பிராயம் பல தரப்புகளிடமும் உண்டு. அதற்குக் காரணம் புலிகள் கடந்தகால இலங்கை அரசுகளின் தவறான தந்திரோபாயங்களைப் பயன்படுத்திப் பெற்ற பெரும் இராணுவ வெற்றிகளை வைத்துக் கொண்டு, தமிழர்கள் மத்தியிலிருந்த பேராசிரியர் சிவத்தம்பி போன்ற மெத்தப் படித்த தோவிகள் நம்பியது போல, நோர்வே உட்பட பல மேற்கு நாடுகளும், புலிகள் யாராலும் தோற்கடிக்கப்பட முடியாத 'விண்ணர்கள்' என்ற கற்பனையிலேயே மூழ்கியிருந்தனர்.

ஆனால் புலிகள் வலிந்திழுத்த சண்டையை மகிந்த அரசு சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களை இறுதியும் அறுதியுமாக 2009 மே மாதத்துடன் பூண்டோடு ஒழித்துக் கட்டியது. அதன் மூலம் இலங்கையைப் பீடித்திருந்த பாரிய புற்று நோய் ஒன்றை இல்லாதொழித்ததுடன், இலங்கை சம்பந்தமாக ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்டிருந்த கனவுகளையும் சுக்கு நூறாக்கியது. இன்று இலங்கை அரசு மீது சுமத்துப்படும் போர்க் குற்றச்சாட்டுகள், உண்மையில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட கரிசனையால் என்பதைவிட, ஏகாதிபத்திய சக்திகளின் திட்டங்கள் தவிடு பொடியானதால் என்பதே உண்மையாகும்.

இவையெல்லாம் இப்பொழுது கடந்தகால விடயங்களாகிவிட்டன. மேற்கு நாடுகள் இலங்கை அரசுக்கெதிராக சில உள்நோக்கங்களுடன் போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்ற போதிலும், ஈராக்கிலோ, ஆப்கானிஸ்தானிலோ, லிபியாவிலோ செய்தது போன்ற நடவடிக்கைகளை, ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றுகின்ற சின்னஞ்சிறிய இலங்கை மீது கட்டவிழ்த்துவிட முடியாது. அதுவும் இந்தியாவுக்கு வேண்டிய மிக நெருங்கிய அணடை நட்பு நாடாகவும், உலகின் இரண்டாவது



சக்திவாய்ந்த பொருளாதார சக்தியான சீனாவுக்கு வேண்டிய நட்பு நாடாகவும் உள்ள இலங்கை, 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்ற ஸ்தானத்திலேயே இருக்கின்றது.

அதனால்தான் இன்று அமெரிக்கா, நோர்வே உட்பட உலகின் பல நாடுகள் இலங்கை தனது நாட்டில் பயங்கரவாதத்தை வெற்றிகரமாக ஒழித்துக்கட்டியதைப் பாராட்டவும், இலங்கையுடனான உறவுகளைப் புதிய நிலைக்கு வளர்த்தெடுக்கவும் விழைந்து நிற்கின்றன. குறிப்பாக நோர்வே முந்திய காலங்களில் இலங்கைக்கு வழங்கிய பொருளாதார உதவி, நலன்புரித் திட்டங்கள் எனபனவற்றுக்கும் அப்பால், தற்பொழுது இலங்கையுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதில் முனைந்து நிற்கின்றது.

இந்த நேரத்தில் நோர்வேயின் புதிய போக்குகள் குறித்து, புலம்பெயர் புலிப் பினாமிகள் நோர்வேக்கு எதிராக முணுமுணுக்க ஆரம்பித்துள்ளனர். புலிகளுக்குச் சார்பான சர்வதேச ஊடகமான 'தமிழ் நெற்' நோர்வே மீதும், அதன் முன்னைய சமாதானத் தூதுவர் சோல்கெய்ம் மீது அதிருப்தி தெரிவித்து செய்திகளை வெளியிட ஆரம்பித்துள்ளது. இந்தப் புலிப் பினாமிகள் எதிர்பார்ப்பதெல்லாம், புலிகள் இலங்கையில் பலமாக இருந்த காலத்தில் அவர்களுக்குச் சார்பாக நோர்வே செயற்பட்டது போல இப்பொழுதும் செயற்பட வேண்டும் என்பதே. நிலைமைகள் மாறும்போது, நாடுகளுக்கிடையிலான உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்படும் என்பதை, விளங்கிக் கொள்ளக் கூடியவர்கள் அல்ல புலிகள் என்பதே இதற்குக் காரணம். அதனால்தான் அவர்கள் இப்படி முற்றுமுழுதான அழிவை அடைந்தார்கள்.

இந்தப் புலிப் பினாமிகள் நோர்வே மீது குறை கூறுவதை விட்டுவிட்டு, எரிக் சோல்கெய்ம் இலங்கைத் தமிழர்களுக்கெனச் சொன்ன இரண்டு பெறுமதியான புத்திமதிகளை, அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் கவனத்துக்கு எடுத்துச்

செயல்படுவது, எதிர்காலத்திலாவது இலங்கைத் தமிழர்கள் சில நன்மைகளை அடையப் பயன்படும். ஒன்று, அவர் இலங்கைத் தமிழர்கள் வன்முறைப் பாதையைக் கைவிட்டு, ஜனநாயக வழியில் செயற்பட வேண்டும் எனக் கூறியுள்ளார். இரண்டாவது, இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர் தமிழர்களின் தலைமைத்துவங்களைக் கைவிட்டுவிட்டு, தமது நாட்டிலுள்ள தலைமைத்துவங்களின் கீழ் செயற்பட வேண்டும் எனக் கோரியுள்ளார். இந்த இரண்டு ஆலோசனைகளும் மிக முக்கியமானவை.

இலங்கைத் தமிழர்கள் தேர்ந்தெடுத்த வன்முறை நிறைந்த ஆயுதப்போராட்டப் பாதையே, கடந்த 30 வருட காலமாக அவர்களுக்கு பெரும் அழிவுகளைக் கொண்டு வந்தது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அந்த அனுபவத்தை பெரும்பான்மையான இலங்கைத் தமிழர்கள் புறக்கணிக்கமாட்டார்கள். இருப்பினும் அவர்களை மீண்டும் வன்முறைப் பாதையில் அழைத்துச் சென்று அழிவுக்குள்ளாக்குவதில, புலம்பெயர் நாடுகளிலுள்ள சில புலிப் பினாமிகளும், தமிழகத்திலுள்ள சில தமிழினப் பிழைப்புவாதிகளும் கச்சை கட்டிக்கொண்டு செயற்படுகிறாகள்.

இந்த இரு பகுதியினரதும் செயற்பாடுகளை புலம்பெயர் தமிழர்கள் இப்பொழுது ஓரளவு இனம் கண்டுள்ளார்கள். அதனால்தான் அண்மைக் காலங்களில் புலம்பெயர் புலிப் பினாமிகள் ஒழுங்கு செய்யும் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் என்பன மக்கள் போதியளவு கலந்து கொள்ளாமல் தோல்விகண்டு வருகின்றன. இருப்பினும் இன்னமும் ஒரு சிறு பகுதி மக்கள், புலிப் பினாதிகளுக்கு நிதி வழங்குவதுடன், அவர்களது நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி வருகின்றனர். அவர்களும் முற்றாக அதைக் கைவிட வேண்டும்.

அடுத்ததாக, இலங்கையில் புலிகள் அழிக்கப்பட்டு அங்கு தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை படிப்படியாக முன்னேறி வருவதைக் கண்டு பொறுக்காத புலம்பெயர் புலிப் பினாமிகள், அதைக் குழப்புவதற்காகப் பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்வதுடன், தாமே இலங்கைத் தமிழர்களுக்குத் தலைவர்கள் எனவும் ஒரு பிரமையை ஏற்படுத்த முயல்கின்றனர். ஆனால் அவர்களது பிரச்சாரத்தை இலங்கைத் தமிழ் மக்கள் நம்பாத போதிலும், ஈராக்கில் லிபியாவில் செய்தது போன்று இலங்கையிலும் மேற்குலக சக்திகளைத் தலையிட வைத்து, தமிழர்களுக்கு ஒரு தீர்வைக் கொண்டுவரப் போவதாக நம்பிக்கையூட்ட பிரயத்தனப்படுகின்றனர். ஆழமான சர்வதேச அனுபவம் இல்லாத சாதாரண தமிழ் மக்களை, இதன்மூலம் அவர்கள் ஏமாற்ற முயல்கின்றனர்.

ஆனால் உண்மையில் இந்த புலம்பெயர் புலிப் பினாமிகளுக்கு, இலங்கைத் தமிழர்கள் குறித்து எந்தவிதமான அக்கறையும் கிடையாது. அவர்கள் தமது சொந்த லாபங்களுக்காக இலங்கைத் தமிழர்களைப் பகடைக்காயாக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் தமது புலம்பெயர் சொகுசு வாழ்க்கையைக் கைவிட்டு இலங்கையில் வந்து ஒருபோதும் வாழப்போவதில்லை. அவர்களது நோக்கமெல்லாம் புலம்பெயர் நாடுகளில் வீடுகள், கார்கள், கடைகள், நகைகள் என வாங்கிக் குவிப்பதோடு, யாழ்ப்பாணத்தில் உள்ள சொத்துகளைப் பாதுகாப்பதும், கொழும்பில் ஒரு வீடு, வவுனியாவில் ஒரு வீடு, முடியுமானால் இந்தியாவில் ஒரு வீடு என சொத்துகள் வாங்கிக் குவிப்பதும்தான். இலங்கை அரசுக்கெதிராகவும், இலங்கைத் தமிழர்களுக்காதரவாகவும் அவர்கள் தொண்டை கிழியச் செய்யும் பிரச்சாரமெல்லாம், தாம் வாழும் நாடுகளை ஏமாற்றித் தமது சுத்துமாத்து வேலைகளைக் கொண்டு நடாத்துவதற்காகத்தான் என்பதை, தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் உணர்ந்துகொண்டு, புலம்பெயர் புலிப் பினாமிகளை முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும்.

இந்த விடயத்தில், நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சோல்கெய்ம் அவர்களின் பயனுள்ள ஆலோசனைகளை இலங்கைத் தமிழர்கள் கவனத்தில் எடுப்பது அவசியம். அதேநேரத்தில் சோல்கெய்ம் இலங்கை அரசுக்குச் சொன்ன ஆலோசனைகளையும் மகிந்த ராஜபக்சவின் அரசு கவனத்தில் கொள்வது மிகவும் அவசியம்.

இலங்கை அரசு போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவந்தது போல, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வையும் காண வேண்டும் என அவர் கூறியுள்ளார். அத்துடன் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததின் மூலம், மகிந்த ராஜபக்ச அரசு இலங்கை மக்கள் மத்தியில் இன்று மிகுந்த செல்வாக்குடன் காணப்படுவதால், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவருக்கு ஒரு சாத்தியமான விடயம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே அரசாங்கம் இதுவிடயத்தில் போதிய கவனம் செலுத்துவதுடன், விரைந்து செயற்படவும் வேண்டும்.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தோற்றதிற்கு அந்நாட்டு அரசும், அதன் விசேட சமாதானத் தூதுவரும் பல்வேறு காரணங்களைக் கூறினாலும், நோர்வேயின் பக்கச்சார்பான – அதாவது புலிகளுக்குச் சார்பான நிலைப்பாடும், அது தோல்வியடைந்ததிற்கான பிரதான காரணிகளில் ஒன்று என்பதை அவர்கள் மறுக்க முடியாது. ஆனால் அதற்காக, சோல்கெய்ம் இலங்கைத் தமிழர்களுக்கும், இலங்கை அரசுக்கும் கூறிய ஆலோசனைகளை நிராகரிப்பது தவறானது. (முற்றும்)

நானும் இன்னொரு தோழரும் கனடிய பெரும் நகரான ரொறன்ரோவில் உள்ள சென்.ஜேம்ஸ் பூங்காவில் நடைபெற்று வந்த (இப்பொழுது அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர்) 'ரொறன்ரோவை இடம் கொள்ளும்' (Occupy Toronto) போராட்டத்தை நேரில் பார்வையிடச் சென்றிருந்தோம். அங்கு தங்கியிருந்த இளைஞர்களும் யுவதிகளும் கார்த்திகை மாத




# 'ரொறன்ரோவை இடம் கொள்ளும் போராட்டம்' (Occupy Toronto) – ஒரு நேரடி அனுபவம்!

- கதிரவன் -

கடும் குளிரில் சிறு சிறு கூடாரங்களில் நோயோடும், அதேநேரத்தில் மன உறுதியோடும் இருந்ததைக் கண்டோம். சில இளைஞர்களுக்கு குளிரின் தாக்கத்தால் பேசவே முடியவில்லை. ஆனாலும் அவர்களின் முகங்களில் புதிய சமுதாயத்தின் விடிவெள்ளியை நாம் கண்டோம்.

இதுவரை உறங்கிக் கிடந்த இளைய தலைமுறை நிமிர்ந்து நிற்பதை நேராகக் கண்டோம். மனித சமூகத்தின் மீட்சி தூரத்தில் இல்லையென்பதை அவர்களது உறுதியான பதில்கள் எமக்கு எடுத்தியம்பின. காந்தியினதும் மார்டின் லூதர் கிங்கினதும் செயல்பாடான சாத்வீகப் போராட்டத்தின் முன்னெடுப்பாளர்களாக அவர்களை நாங்கள் கண்டோம்.

அவர்கள் பலவிதமான கருத்துகள் சிந்தனைகளோடு இருந்தாலும், மிக மோசமான சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தில் எல்லோரும் ஐக்கிப்பட்டிருந்தார்கள். எங்களது சில கேள்விகளுக்கு மிக அமைதியாகவும் ஆழமான சிந்தனையோடும் பதிலிறுத்தார்கள்.

எங்களது முதலாவது கேள்வியே "உங்களது நோக்கம் என்ன?" என்பதுடன் ஆரம்பமாகியது. அதற்குப் பதிலளித்த இளைஞர் எந்த பதட்டமுமில்லாமல், "நாங்கள் மக்களின் துன்ப துயரங்களுக்காகவும், ஒரு நீதியான சமுதாய அமைப்புக்காகவும் போராடுகின்றோம்" என்றார். மேலும் அவர் கூறுகையில், "சனத்தொகையில் ஒரு வீதமான பெரும் கோப்பரேட் சக்திகள்தான் (Corporate Powers) 99 வீதமான எம்மைப் போன்ற மக்களைச் சுரண்டுகிறார்கள். எனவே எமது நீதியான போராட்டம் வெல்லும்" என்றார்.

இன்னொரு இளைஞர் கூறுகையில், "எமது போராட்டம் எங்களுக்கானது மட்டுமல்ல. எமது குழந்தைகளுக்கானதும் எதிர்கால மனித சமூகத்துக்கானதுமாகும்" என்று கூறினார். அவருடைய இணையத்தளத்தில் (www.iamnotaparty.com) இதை விபரமாகப் பார்வையிடலாம் என்றும் கூறினார். தாங்கள் சுரண்டல் ஒடுக்குமுறை என்பனவற்றுக்கு எதிராக மட்டுமின்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகவும் போராடுவதாக அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் வைத்திருந்த பதாதைகளில் அவர்களது பின்வரும் நோக்கங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

- மிகப்பெரிய பணக்காரர்களுக்கு வரியை அதிகரி
- முதலாளித்துவத்தைத் தோற்கடி
- முதலாளித்துவமே வறுமையை உருவாக்குகின்றது

- இன்றுள்ள வறுமை வேலையில்லாத் திண்டாட்டத்தின் மூலவேரே இன்று நிலவுகின்ற மோசமான சமூக அமைப்புத்தான்.
- உலகின் 1 வீத செல்வர்கள் 99 வீத மக்களைச் சுரண்டுவது அடிப்படைத் தவறாகும்.
- அடுத்து வரும் பரம்பரையைப் பாதுகாப்போம்.
- இந்த எதிர்ப்பு எங்கள் போராட்டத்தின் ஒரு வடிவமாகும்.
- வயிற்றை இறுக்கும் 'சிக்கன' நடவடிக்கைக்கு எதிராக ஒன்றுபடுவோம்.
- மக்களை அறிவூட்டுவோம் – அறிவைப் பரவலாக்குவோம்

இந்த சுலோகங்கள் சிலவற்றில் மக்கள் விரோத நடவடிக்கைகள் எடுத்து வரும் ரொறன்ரோ மாநகர முதல்வர் றொப் போர்ட்டிற்கு எதிரான வாசகங்களும் காணப்பட்டன. அவரே அமைதியான போராட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொண்டவராவார் என அவர்கள் குறிப்பிட்டனர்.

முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் என்பனவற்றுக்கு எதிராகப் பல சினிமாப் படங்களைத் தயாரித்த மைக்கேல் மூரே (Michael Moore) வோல் ஸ்றீற்றை இடம் கொள்ளும் போராட்டத்தின் நியாயப்பாட்டை ஆதரித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள 400 மிகப்பெரிய பணக்காரர்களிடமுள்ள பணம் 150 மில்லியன் வறுமைப்பட்ட அமெரிக்கர்களின் மொத்த வருமானத்தை விட அதிகமாகும். அமெரிக்கர்களில் 15 வீதமானவர்கள் (45 மில்லியன்) வறுமையில் வாடுகிறார்கள். 9 வீதமானவர்கள் (27 மில்லியன்) வேலையில்லாது திண்டாடுகிறார்கள். 50 மில்லியன் மக்களுக்கு மருத்துவ காப்புறுதி இல்லை. இவ்வளவிற்கும் அமெரிக்க அரசு மக்களிடமிருந்து பெறப்பட்ட வரிப்பணத்தில் 700 பில்லியன் டொலர்களை வங்குரோத்தான வங்கிகளை மீட்பதற்கு வழங்கியுள்ளது. ஆனால் வறுமையில் வாடும் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

உண்மையில் இந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசுகள் குருவிச்சை போல சுரண்டலிலேயே தங்கியுள்ளன. இவர்களது வருமானம் முதலீட்டிலும் கடன் வழங்குவதிலுமே தங்கியுள்ளது. இவர்கள் உற்பத்தியில் ஈடுபடுவது மிகமிகக் குறைந்துவிட்டது. உதாரணத்துக்கு இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால், 1960ல் பொருளுற்பத்தி (GDP) 35 வீதமாக இருந்தது. அது 1999ல் 19 வீதமாகக் குறைந்து, இன்று வெறும் 13 வீதமாகக் கீழிறங்கியுள்ளது.

இன்று இந்த 'வோல் ஸ்றீற்றை இடம் கொள்ளும் போராட்டம்' அமெரிக்கா உட்பட 80க்கு மேற்பட்ட நாடுகளில் 1000க்கு மேற்பட்ட நகரங்களுக்குப் பரவியுள்ளது. உண்மையில் இந்தப் போராட்டம் ஐயத்திற்கு இடமில்லாமல் அதில் ஈடுபட்ட அனைத்து நாட்டுத் தொழிலாளர்களையும் மக்களையும் சரியான முறையில் அறிவூட்டியுள்ளது என்றால் மிகையாகாது. இந்தப் போராட்டம் உலகளாவிய ரீதியில் முதலாளித்துவ சமூக அமைப்பின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

***"சில வேளைகளில் பல தசாப்தங்களாக எதுவும் நடப்பதில்லை. ஆனால் சில கிழமைகளில் பல தசாப்தங்களில் நடைபெற வேண்டியவை நடந்து முடிந்து விடுகின்றன" – லெனின்***

*

---

15ம் பக்கத்தொடர்ச்சி........
இப்பொழுது ஐக்கிய இலங்கைக்குள் மாகாண மட்டத்தில் அதிகாரம் பெறும் குறைந்தளவான அதிகாரப் பகிர்வு முறைக்கு முன்வந்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும் நீடித்ததானதுமான தீர்வொன்றைக்காண அரசு முன்வர வேண்டும்.

அதைவிடுத்து பாசிசப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைத் தோற்கடித்ததாக அரசு கருதுமானால், மீண்டும் விரும்பத்தகாத நிலைதான் நாட்டில் ஏற்படும். இந்த விடயத்தில் அரசின் பக்கம்தான் பந்து இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இடித்துரைக்க விரும்புகிறோம்.
*

# கச்சதீவை இந்தியா
## இலங்கைக்கு கையளித்தது என்பதே தவறானதாகும்
### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

“கச்சதீவை இந்தியா இலங்கைக்கு வழங்கியதாகச் சொல்வது தவறானது. அது எப்போதுமே இலங்கையின் ஒருபாகமாகவே இருந்து வந்துள்ளது.” இவ்வாறு கூறியிருக்கிறார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ். ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க, பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே பீரிஸ் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் “1965ம் ஆண்டு முதல் கச்சதீவு மேலான இலங்கையின் உரிமை முறைப்படி நிலைநாட்டப்பட்டு வருகிறது. உத்தியோகபூர்வ உரையாடல்கள், வரைபடங்கள், விசேட சட்டமூலம் என்பனவற்றின் ஊடாக இது நிலைநாட்டப்பட்டுள்ளது. கச்சதீவு அதற்கு முன்னர் டச்சு கிழக்கிந்திய கம்பனி வசமும் பின்னர் பிரிட்டிஸ் காலனி அரசிடமும் இருந்துள்ளது.”

“இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கும் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் மூலம், இந்தியா கச்சதீவை இலங்கைக்குக் கையளித்ததாகச் செய்யும் பிரச்சாரம் தவறானதாகும். 1974 மற்றும் 1976ம் ஆண்டுகளில் இருநாட்டுப் பிரதமர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, பாக்குக்குடா மற்றும் பாக்குநீரிணைப் பகுதிகளில் இருநாட்டு எல்லைகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு சில ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவ்வளவுதான்” என அவர் விளக்கிக் கூறினார்.

இது ஒருபுறமிருக்க, நாம் அறிந்த தகவல்களின்படியும், வரலாற்றுக்காலம் முதல் கச்சதீவு நெடுந்தீவு கிராமசபையின் கீழ் இருந்து வருவதுடன், அங்குள்ள அந்தோனியார் கோவிலும் நெடுந்தீவு பங்குத் தந்தையின் கீழேயே இருந்து வருகின்றது.

இந்த உண்மைகளை, கச்சதீவை இந்தியா மீட்க வேண்டும் எனக் கூச்சல் போடும் தமிழக அரசியல்வாதிகள் உணர்வார்களா என்பதே கேள்வியாகும்.
*

# தென் வியட்நாமில் மயிரிழையில் உயிர் தப்பிய லக்ஸ்மன் கதிர்காமர்!

தென் வியட்நாம் தலைநகரான சைகோனில் நடைபெற்ற அம்னெஸ்ரி மாநாட்டில், ஒரு பார்வையாளராகக் கலந்து கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி லகஸ்மன் கதிர்காமர், அங்கு வியாழக்கிழமை கெரில்லாக்கள் நடாத்திய ஒரு தாக்குலில் மயிரிழையில் உயிர் தப்பினார்.

சைகோன் நகரின் இதயப் பகுதியான பார் இம்பீரியலை (Bar Imperial) குண்டு வெடிப்புத் தாக்கிய போது, அந்த நேரத்தில் கதிர்காமர் அங்கு இருந்தார். நகரின் பிரபல்யமான ஹோட்டல் மஜெஸ்ரிக்கிலிருந்து ஐம்பது யார் தூரத்திலேயே பார் இம்பீரியல் இருக்கின்றது.

பலர் காயமடைந்த இந்தச் சம்பவத்தில் இரு அமெரிக்கர்களும் அடங்கியிருந்தனர். அவர்களில் ஒருவர் பின்னர் மரணமடைந்ததாகத் தெரிய வருகிறது.

சமீபத்தில் அங்கு நடந்த சதியின் பின்னர் கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் மேற்கொண்ட முதலாவது தாக்குதல் இதுவாகும். இந்தத் தாக்குதலை கெரில்லாக்கள் முன்கூட்டியே திட்டமிட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

தகவல்: Sunday Observer, Nov.17, 1963

**குறிப்பு:** முன்னைநாள் வெளிநாட்டமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமர், ஒரு பிரபலமான சட்ட வல்லுநர். அவர் தமது இளமைக்காலம் முதல் பல சர்வதேச சட்டவியல் மாநாடுகளில் கலந்து கொண்டதுடன், பல நாடுகளின் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றியும் உள்ளார். ‘கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை’ என்பதுபோல, புலிகள் அவரை அநியாயமாகப் படுகொலை செய்து, தமிழர்கள் மத்தியிலிருந்த ஒரு திறமைமிக்க அறிவாளியைத் தமது நரமாமிச வேட்கைக்குத் தீனியாக்கிக் கொண்டனர்.
*

## பொருள்முதல்வாதம்

“சத்தியத்தின் உரை கல் மூளை அல்ல. உலகப் பொருள் இயற்கைதான்”

**– கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில்**

# அது சரியென்றால், இது மட்டும் எப்படிப் பிழையாகும்?

மன்னார் கடல் படுகையில் எண்ணெய் வளங்களைக் கண்டறிந்து, அதை அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த அகழ்வராய்ச்சி வேலைகளில் ஈடுபடும் பொருட்டு இந்திய நிறுவனம் ஒன்றிற்கு உரிமம் வழங்கப்பட்டு, அது அந்த வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. தற்பொழுது மேலுமொரு இந்திய நிறுவனத்துக்கு அனுமதி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதுதவிர, ரஸ்ய நிறுவனம் ஒன்றுக்கும் எண்ணெய் ஆய்வுகளுக்கு இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது. தற்பொழுது வந்துள்ள செய்திகளின்படி, சீன நிறுவனம் ஒன்றுக்கும் அனுமதி அளிக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், அதையிட்டு இந்திய அரசு இலங்கையிடம் ஆட்சேபனை தெரிவித்ததாகவும் செய்திகள் வந்துள்ளன. இந்தியாவுக்கு மிக அருகாமையில் மன்னார் கடல் இருப்பதால், அங்கு சீனாவுக்கு அனுமதி கொடுத்தால் அது தமது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என இந்தியா தனது ஆட்சேபனைக்குக் காரணம் கூறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்திய ஆட்சேபனைக்கு அதுதான் காரணமாக இருக்குமானால் அது, 'ஊருக்குத்தான் உபதேசம், உனக்கல்லடி' என்ற கதையாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் சீனாவும் வியட்நாமும் உரிமை கோரி வரும் தென் சீனக்கடலில், இந்தியா வியட்நாமுடன் சேர்ந்து எண்ணெய் அகழ்வராய்ச்சி செய்வதற்கு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளது. இந்த விவகாரம் குறித்து அண்மையில் சர்வதேச மாநாடொன்றில் சந்தித்த இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் சீன ஜனாதிபதி ஹூயுண்டாவோ கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர் அது முழுக்க முழுக்க பொருளாதார நலன் சார்ந்த விடயம் மாத்திரமே எனக் கூறிச் சமாளித்துக் கொண்டார்.

சீனாவுக்கு சொந்தமான கடலில் வியட்நாமுடன் சேர்ந்து எண்ணெய் அகழ்வராய்ச்சி செய்வது, இந்தியாவைப் பொறுத்தவரை பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயம். ஆனால் இலங்கை தனது கடலில் தனது நேச நாடுகளில் ஒன்றான இந்தியாவுக்கும் அனுமதி கொடுத்து, இன்னொரு நேச நாடான சீனாவுக்கும் அனுமதி கொடுத்தால், அது மட்டும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயம்! என்னே இந்தியாவின் நியாயம்!

இந்திய அரசு தனது சொந்த மக்களுக்கு மட்டுமல்ல, மற்ற நாடுகளின் காதிலையும் பூச்சுற்ற ஆரம்பித்துவிட்டதையே இது காட்டுகிறது. வாழ்க இந்திய ஜனநாயகம்!

— கபிலன்

# வேலையில்லாத் திண்டாட்டம் பாரியளவில் அதிகரித்துள்ளது!

உலகளாவிய அளவில் வேலையில்லாத் திண்டாட்டம் மிக மோசமாக அதிகரித்துள்ளதாக, ஐ.நாவின் துணை அமைப்புகளில் ஒன்றான சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம் தனது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. தொழில் புரியக்கூடிய சனத்தொகையான 3.23 பில்லியன் மக்களில், 200 மில்லியனுக்கு – அதாவது 6.2 வீதத்தினருக்குக் கூடுதலானோர் வேலையற்று இருப்பதாக அந்த ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. ஸ்பெயின், கிறீஸ் போன்ற நாடுகளில் வேலையற்றோர் தொகை 40 வீதத்துக்கும் அதிகமாகும் எனவும் அது குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாகவே ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் கிளர்ச்சிகள் உருவாகியுள்ளன எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் இதன் விளைவாக, அடுத்த சில மாதங்களில் சமூக அமைதியின்மை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அது எச்சரிக்கை செய்துள்ளது.

# வாழ்விழந்தவள் விதி

"மாலையிட்ட மணவாளன் இறந்துவிட்டால்
மங்கை நல்லாள் என்ன செய்வாள்?
அவளை நீங்கள்
ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்
அணுகளவும் அடையாமல் சாகச் செய்தீர்"

– பாவேந்தர் பாரதிதாசன்

# ஆப்கான் யுத்தத்தின் விலை!

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளுக்கும், தலிபான் கிளர்ச்சியாளர்களுக்கும் நடந்து வரும் போரில், 2001ம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில், 38,000 தலிபான்களும் 13,744 கூட்டுப்படைகளும் இறந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

# மக்கள் செல்வாக்குப் பெற்ற திரைக் கலைஞர்களின் கடந்தகாலப் பின்னணி!

- கானாமிர்தன் -



“மச்சானைப் பார்த்தீங்களா
மலைவாழைத் தோப்புக்குள்ளே?”

“அன்னக்கிளி உன்னைத் தேடுதே”

“ஓரம் போ ஓரம் போ
ருக்குமணி வண்டி வருது”

என்கிற பாடல்கள் அன்று மட்டுமல்ல, இன்றும்கூட மக்கள் மனசைச் சுண்டி இழுக்கின்றன. இந்தப் பாடல்களை எழுதியவர்களும், அதைப் பாடியவர்களும், அதற்கு இசை அமைத்தவர்களும் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றனர்.

கிராமிய இசை என்றால் இளைய ராஜா, திரைப்பாடல் என்றால் கங்கை அமரன், கலைத் தொடர்பு என்றால் பாஸ்கரன், இயக்குநர் என்றால் பாரதிராஜா என்று இவர்களை மக்கள் மன்றம் அங்கீகரித்தது.

ஆனால் இவர்களை இயக்கிய பின்னணியை ஆராயும்போதுதான், இது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்ற உண்மை தெளிவாகின்றது.

இந்த பண்ணைப்புரத்து பாட்டு ராஜாக்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேடைகளில் பாட்டுக் கச்சேரி நடாத்தி வந்த, அவர்களின் மூத்த அண்ணரான பாவலர் வரதராஜனுடன் கிராமம் கிராமமாகச் சென்று பாடி வந்தவர்களே. பாவலர் வரதராஜன் அந்த நாட்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்டக்குழு உறுப்பினராகவும், செயற்பாட்டாளராகவும் இருந்தவர். பாவலர் வரதராஜன் குழு கட்சி மேடையில் பாட்டுக்கச்சேரி செய்கிறதென்றால், அந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்து மக்களும் கட்சி வேறுபாடின்றித் திரண்டு விடுவர். அந்த அளவுக்கு அவர்களின் செல்வாக்குக் கொடிகட்டிப் பறந்தது.

அந்தப் பின்னணியே அவர்களின் சகோதரர்களில் ஒருவரான இளையராஜாவை, பிற்காலத்தில் தமிழ்த் திரையுலகின் பெரும் இசை ஜம்பவானாக மேலெழ வைத்தது என்றால் மிகையாகாது.

திரைக்கதை எழுத்தாளர் செல்வராஜும் மார்க்சிய இயக்கத்தில் தோன்றியவரே. தமிழ்த் திரைப்பட உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பதித்த பாரதிராஜா கூட, சினிமாவுக்கு வரமுன் பல ஆண்டுகள், மதுரை மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்காக நாடகங்கள் நடாத்தி வந்தவரே.

ஏன் கவிஞர் கண்ணதாசனும் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவராக இருந்து கட்சி வேலை செய்தவரே. அதேபோல பெரும் செல்வாக்குடன் திகழ்ந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரரே.

பம்பாயில் (இன்றைய மும்பாய்) பாவலர் வரதராஜன் சகோதரர்கள் இசை நிகழ்ச்சி ஒன்று நடாத்திக்கொண்டு இருக்கையிலேயே பட்டுக்கோட்டையார் காலமானார். உடனே பாவலர் அவர்கள் ஒரு திரைப்பாடல், திரைப்பாடலாசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்னும் இலக்கணத்தை மையமாகக் கொண்டு, பட்டுக்கோட்டையாரை உதாரணமாக வைத்துப் பாடுகின்றார்.

**உழைப்போரையெழுப்பும் திரைப்பாடல் – எழுதி**
**புதுப்பாதை வகுத்தாய் தோழனே!**
**உழைக்கின்ற ஏழை விவசாயி நிலைமை**
**உணர்த்தும் தமிழ்க்கவி வேந்தனே!**

**கலையென்ற பெயரால் இழிவான செயல்தான்**
**தலைதூக்கி நின்ற நாட்டிலே**
**நிலையாக உழவர் தொழிலாளர்க்காக**
**கலை தன்னைத் தொகுத்தாய் ஏட்டிலே!**

**மாறாத சோகம் இனி மாறுமா? – உந்தன்**
**தேனான பாடலிசை கேட்குமா?**

ஆனால் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட்டாக வலம்வந்த கண்ணதாசன் காலவோட்டத்திலே இந்துத்துவவாதியாக மாறினார். அதேபோல அண்மையில் பாரதிராஜா, புலி மாபியாக்களின் ஒரு ஆதரவாளராகச் சீரழிந்து போயுள்ளார். *

முன்பக்கத்தொடர்ச்சி...

வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஆக்கபூர்மான பங்களிப்பை எப்பொழுதும் வழங்கியதில்லை. கடந்தகால அரசாங்கங்கள் தவிர்க்க முடியாமல் சில விடயங்களில் இறங்கி வந்த நேரங்களில் எல்லாம், அதைப் பயன்படுத்தி சில விடயங்களைத் தன்னும் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக புதிய புதிய நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைத்துப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவது தமிழர் தரப்பில் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது.

தற்போதைய மூன்று கோரிக்கைகளைப் பொறுத்த வரையிலும்கூட அதுதான் நிலைமை. வடக்கு கிழக்கு இணைப்பைப் பொறுத்தவரையில் அது முன்னர் தற்காலிகமாகவே இணைக்கப்பட்டிருந்தது என்பதை கூட்டமைப்பினர் மறந்து விடுகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணசபையை சிங்கள இனவாத ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் சேர்ந்து புலிகள் கலைக்காமல் இருந்திருந்தால், சில வேளைகளில் மக்கள் கருத்துக் கணிப்பில் வெற்றிபெற்று அது நிரந்தரமாக இணைக்கப்பட்டிருப்பதுடன், தமிழ் மக்களின் வேறு பல பிரச்சினைகளும் தீர்ந்திருக்கும் என்பதை புலிகளை ஏகப்பிரதிநிகளாக ஏற்றிருந்த தமிழ் கூட்டமைப்பினர் இந்த சந்தர்ப்பத்தில் எண்ணிப் பார்ப்பது அவசியம்.

இன்று வடக்கு கிழக்கு இணைப்பு என்பது சட்டரீதியான அந்தஸ்தை இழந்துள்ளதுடன், அரசியல் ரீதியாகவும் அது பொருத்தமில்லாததும் நடைமுறைச் சாத்தியமில்லாததுமாகும். ஏனெனில் கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையை எடுத்துக் கொண்டால் சிங்கள - முஸ்லீம் மக்கள் மூன்றில் இரண்டு பங்கினராகவும், தமிழ் மக்கள் மூன்றிலொரு பகுதியினராகவுமே இருக்கின்றனர். அங்கு வாழும் சிங்கள – முஸ்லீம் மக்கள் வடக்கு கிழக்கு இணைப்பை முற்றாக எதிர்ப்பதுடன், அங்குள்ள தமிழ் மக்களிலும் கணிசமான ஒரு பிரிவினர் இணைப்பை விரும்பவில்லை. எனவே கிழக்கின் பெரும்பான்மையான மக்களின் விருப்பமின்றி வடக்குடன் கிழக்கை பலவந்தமாக இணைப்பது என்பது, ஆக்கிரமிப்புக்கு ஒப்பான செயலாகும். வேண்டுமானால் கிழக்கு மாகாண மக்கள் வடக்குடன் சேர்ந்து வாழ விரும்புகிறார்களா என, ஒரு கருத்துக்கணிப்பை அந்த மாகாண மக்களிடம் நடாத்தி முடிவெடுக்கும்படி தமிழ் கூட்டமைப்பு அரசிடம் கோரினால் அது ஜனநாயகமாகும்.

பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரை, ஒன்றிணைந்த இலங்கை பொலிஸ் சேவையின் கீழ் முதலில் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரின் கீழ் தமிழ் தெரிந்த பொலிசாரை கூடுதலாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நியமிக்கும் ஏற்பாட்டை செய்து, பின்னர் அதிலிருந்து படிப்படியாக தனி பொலிஸ் சேவையை நோக்கி முன்னேறலாம்.

காணி அதிகாரம் என்பது மாகாண சபைகளைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான விடயமாகும். தனது மாகாண மக்களின் காணித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், மாகாணசபைகளின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் காணி அதிகாரம் நிச்சயம் தேவை. அதை எடுத்த எடுப்பிலேயே அரசாங்கம் நிராகரிப்பது தவறாகும். மாகாணங்களில் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் சில காணிகளின் தேவை இருப்பதால், மத்திய - மாகாண அரசுகளின் கூட்டு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மூலம் இப்பிரச்சினையைக் கையாளலாம்.

இவைதான் நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளாக இருக்க முடியும் என்பதைத் தமிழ் கூட்டமைப்பு உணர வேண்டும். இடுப்பில் துணி எதுவும் இல்லாமல் நிர்வாணமாக நிற்பவன் கோவணம் தன்னும் கிடைத்தால் முதலில் அதைத்தன்னும் பெற்று மானத்தைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். கூட்டமைப்பினரோ ஒரு நாலுமுழ வேட்டி கிடைப்பதைக்கூட நிராகரித்து, எடுத்த எடுப்பிலேயே பட்டு வேட்டிதான் வேண்டுமென அடம் பிடிப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது.

இன்னொன்றையும் கூட்டமைப்பினர் கவனிக்க வேண்டும். மாகாணசபை என்பது வடக்கு கிழக்கில் மட்டும் உள்ள ஒருமுறை அல்ல. அது இலங்கையின் 9 மாகாணங்களிலும் உள்ள ஒன்றாகும். ஏனைய மாகாணத்தவர்களுக்கும் காணி அதிகாரங்கள் போன்றவை தேவை. எனவே அவர்களையும் ஒன்றிணைத்து கோரிக்கை வைக்கக்கூடிய சாத்தியமான விடயங்களில் அவர்களையும் அணுக வேண்டும். அப்படி அணுகினால் அவர்கள் நிச்சயம் ஒத்துழைப்பார்கள். அதைவிடுத்து கூட்டமைப்பினர் பிரிவினை கோருகிறார்கள் என்ற ஐயப்பாட்டை விதைக்கும் வகையில் கோரிக்கைகளை முன் வைத்தால் எதிர் விளைவுகள்தான் ஏற்படும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசைப் பொறுத்தவரையிலும்கூட அது பொறுப்புணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் செயற்படுவது அவசியம். ஏனெனில் இலங்கையில் தமிழர்கள் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டு, பின்னர் சமஸ்டி கேட்டு, அதன்பின்னர் தனிநாடு கேட்டு, அதற்காக அதற்காக ஆயுதம் தாங்கிப் போராடி, தோற்கடிக்கப்பட்ட பின்னர்

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...

### இப்படியும் நடந்தது

## இப்படித்தான் தமிழுக்காக தமிழ் கட்சிகள் போராடின!

தமிழர்களின் மூத்த அரசியல் கட்சியான தமிழ் காங்கிரசிலிருந்து இன்றைய தமிழ் தேசியக்கூட்டமைப்பு வரை எல்லாக் கட்சிகளும் தமிழ், தமிழினம், தமிழனின் பாரம்பரியம், ஆண்ட தமிழினம், கல்தோன்றி மண் தோன்றாக் காலத் தமிழன், தேசியம், தன்னாட்சி, சுய நிர்ணயம், தலை வணங்காத் தமிழன் இப்படி டசின் கணக்கான கொடிகளைப் பிடித்துக் கொண்டே இதுவரை காலமும் தமது அரசியல் நொண்டிக் குதிரையை ஓட்டி வந்திருக்கின்றனர். ஆனால் நடைமுறையில் அதற்காகப் பாடுபட்டிருக்கிறார்களா என்றால், ஆகாயவெளியில் சூனியத்தைத்தான் தேட வேண்டும். இன்றுவரை இது தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் போல தொடர்கதையாக அரங்கேறி வருகிறது. இதற்கொரு உதாரணத்தை இங்கு கூறலாம்.

தமிழ் மொழியை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்திய தமிழ் காங்கிரஸ் – தமிழரசுக் கட்சிகள் அதற்காக இதயசுத்தியாகச் செயற்பட்டார்களா என்பதை அறிந்து கொள்ள கீழே உள்ள சம்பவம் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.

1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தவுடன், ஐ.தே.கவுடன் போட்டி போடுவதற்காக தேர்தல் நேரத்தில் அறிவித்ததிற்கிணங்க 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொண்டு வந்தார். அதை தமிழ் கட்சிகள் மட்டுமின்றி, இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி என்பனவும் தீவிரமாக எதிர்த்தன. அந்த நேரத்தில்தான் சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர்.டீ.சில்வா, "இருமொழி என்றால் ஒரு நாடாக இருக்கும், ஒரு மொழி என்றால் இரு நாடாகி விடும்" எனத் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்.

தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்தும், தமிழுக்கும் சம உரிமை கோரியும் கொழும்பு நகர மண்டபத்தில் கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய கூட்டத்தில், சிங்கள இனவெறிக் காடையர்கள் புகுந்து தாக்கியதில் பல கம்யூனிஸ்ட்டுகள் இரத்தம் சிந்தவும் நேரிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக்குழு சிங்களத்துடன் தமிழையும் ஆட்சி மொழியாக்கக்கோரி, மக்கள் இயக்கம் ஒன்றை முனனெடுக்கும் முயற்சிகளில் இறங்கியது. இதன்பொருட்டு யாழ்.மாநகரசபை மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து, தமிழ் கட்சிகள் உட்பட பல கட்சிகளுக்கும் அதில் கலந்துகொள்ளும்படி அழைப்பு அனுப்பியது.

இந்த அழைப்புக்குப் பதில் அனுப்பிய தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், ஆங்கிலமே அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என்பது தனது கொள்கை என்பதால், அந்தக் கூட்டத்தில் தன்னால் கலந்து கொள்ள முடியாது என்று அறிவித்துவிட்டார். தமிழரசுக்கட்சி அனுப்பி வைத்த பதிலில், தமிழ் காங்கிரஸ் கட்சி அதில் கலந்து கொள்ளாதபடியால் தாங்களும் அதில் கலந்துகொள்ள முடியாது என அறிவித்தது.

இப்படித்தான் இரண்டு பிரதான தமிழ் கட்சிகளும் தமிழ் மொழிக்காகப் போராடின என்பதை, அவர்களது கருப்பையில் உருவான புலிகளும் சரி, தமிழினத்துக்காக இன்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் பல்வேறு தமிழ் தேசியவாதக் குழுக்களுக்கும் சரி தெரிந்திருக்குமோ என்பது கேள்விக்குறிதான்.

## அமெரிக்காவுக்குப் பயந்து சமாதான மேசைக்கு வந்த புலிகள்!

"தமது அமைப்புத் தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து புலிகள் கவலை கொண்டுள்ளார்கள் என்று அறிய முடிகிறது. செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னர் இப்போது வரைக்கும் இந்தக் கவலை இருப்பதாகத் தெரிகிறது. புலிகளின் கவலையின் இதயமாக இருந்ததெல்லாம் என்றாவது ஒருநாள் அமெரிக்கா தங்களுடன் சண்டையிடும் என்பதுதான். அமெரிக்கா குறித்த புலிகளின் இந்தப் பயம்தான், சமாதானப் பேச்சுகளில் புலிகளைத் தொடர்ந்தும் ஈடுபட வைத்துக் கொண்டிருக்கிறது, என மொறகொட உட்பட இலங்கையர்கள் பலர் நம்புகின்றனர்"

– இவ்வாறு 2002 அக்டோபரில் கொழும்பிலிருந்த அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் அமெரிக்க அரசுக்கு அனுப்பிய கேபிள் செய்தியொன்றில் தெரிவித்திருப்பதாக, 'விக்கிலீக்ஸ்' அண்மையில் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. *